திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம்.

*1597—திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு I.U.D.P. திட்டத்தின்கீழ் பஸ் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

10-05 மணி

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சி சுற்றுலா பயணிகள் அதிகமாக வந்து போகின்ற நகரம். அந்த நகரத்தில் இது வரையிலும் ஒரு பேருந்து நிலையம் அமையாமல் இருக்கிறது. அரசினுடைய ஐ.யூ.டி.பி. திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று திருக்குழுக் குன்றம் பேரூராட்சி தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அவர்களுக்குக் கடன் வழங்கி அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான திட்டம் நகர ஊரமைப்பு இயக்குநருக்கு இது வரையிலும் வந்து சேரவில்லை. அந்தத் திட்டம் பேரூராட்சியினுடைய நிர்வாக இயக்குநர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையோடு நகர ஊரமைப்பு இயக்குநருக்கு வருமானால் விரைவில் பரிசீலனை செய்து பரிவோடு ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 9]

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியில் தீர்மானம் போட்டு அந்த அதிகாரியிடத்திலிருந்து பொதுப் பணித் துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. சுமார் 22 இலட்சம் ரூபாயில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான வரைபடம் கூட அளிக்கப்பட்டு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கே பொதுப் பணித் துறை அதிகாரிகள்கூட வந்து பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். எனவே தவறுதலான தகவல்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு யாரோ தந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்த வரைபடத்தை ஏற்கெனவே நானும் பார்த்திருக்கிறேன். எனவே அந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு கடன் வழங்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நகர ஊரமைப்புக் குழு வாரியத்தின்மூலம் இந்த திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும். ஆனால் இந்தத் திட்டம் நகர ஊரமைப்பு இயக்குநருக்கு இதுவரையில் வரவில்லை என்ற குறிப்பை இங்கே வழங்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் விரைவிலே நகர ஊரமைப்பு இயக்குநருக்கு வரும். உடனடியாக அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதைத் தலைமைப் பொறியாளர் மூலமாகவும் தயாரித்து மற்றும் அந்தத் திட்டத்திற்கான வரைபடத்தையும் தயாரித்து அதற்கான தொழில் நுட்ப அனுமதியை விரைவில் வழங்குவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைத் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடல் எல்லைக்குள் தமிழக மீன்வர்கள் 700 பேர்களைக் கொண்ட 78 மீன்பிடி படகுகளை ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் செல்ல முயற்சி செய்தனர் என்றும் இலங்கைக் கடற்படையினர்